[1978 செப்டம்பர் 11

திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்தில் இரண்டு கண்மாய்கள் இருக்கின்றன. ஒரு கண்மாய் பெரிய கண்மாய். அது வைகைப் பாசனத்தோடு இணைக்கப்பட்டது. அதனுடைய பாசன ஏக்கர்கள் 2,600. இராமநாதபுரத்திலே உள்ள இன்னொரு கண்மாய் சக்கரக்கோட்டை கண்மாய். அந்தக் கண்மாய் வைகைப் பாசனத்தில் சேர்க்கப்படாததால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான மழை பெய்தாலொழிய தண்ணீர் கிடைப்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிற பொழுது சொன்னார்கள், தென் கலிங்கின் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டது என்று. அதற்குத் தண்ணீரைப் பெரிய கண்மாயில் தண்ணீர் வந்தால்தான் பெரிய கண்மாயிலிருந்து திறந்து விடுகிறார்கள். எனவே, இது வைகை பாசனத்தில் இணைக்கப்பட்டால் நல்லது. இல்லையென்றால் பெரிய கண்மாயில் தண்ணீர் இல்லை என்றால் திறந்து விடுவதில் சிரமம் இருக்கிறது. ஆகவே, வைகைப் பாசனத்தில் சக்கரக்கோட்டை கண்மாய் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன், சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பு நிலம் 1,679 ஏக்கர் 32 செண்ட் ஆகும், மேலும் வைகை அணையிலே ஏற்கனவே கொடுக்கப்பட வேண்டிய பாசனப் பயிர்களுக்குப் போதுமான நீர் இல்லாத நிலைமை இருக்கிறது. இன்று சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக விஸ்தரிப்புக் குண்டான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புத் திட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது முடிகின்ற நேரத்தில் இன்னும் எவ்வளவு நிலங்களுக்குப் பாசன வசதி விஸ்தரிக்கப்பட முடியும் என்பது இந்த அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வால்பாறை பகுதியில் பாசன வசதி.

*வினா எண் 146—திரு. ர.ச, தங்கவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வால்பாறை தொகுதியிலுள்ள வால்பாறை கீழ்பகுதியில் உள்ள பூமிகள் டேம்களுக்கு அருகில் இருப்பதால், புஞ்சை நிலமென அறிவிக்கப்பட்டுள்ளதை மாற்றி நஞ்சை என அறிவித்து அந்நிலங்களுக்கு நீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. ரா க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி என்று நினைக்கிறேன். இந்தத் திட்டம் பற்றி பட்ஜெட்டில் கூறப்பட்டிருந்தாலும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதையும், எவ்வளவு பணம் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதுடன், இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பாகச் சில * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்பதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ரா. க.சு. தண்டபாணி: இந்தத் திட்டத்திற்குக் குறுக்கே நின்றவர்களை எல்லாம் எப்படி அமைச்சரவர்கள் நீக்கினார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆண்டு கூடிய சீக்கிரத்திலே எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. ஏற்கனவே 2,50,000 ஏக்கர் பாசன வசதியிலே இருந்து கொண்டிருக்கிறது. மேலும் 1,15,000 ஏக்கர் விஸ்தரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அந்த வேலைக்காக இந்த ஆண்டில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டு அந்த வேலைகள் இன்னும் ஓரிரு மாதங்களிலே தொடங்கப்பட இருக்கிறது.

இந்த விஸ்தரிப்புத் திட்டத்தைக் கூடாது என்று பலபேர் எதிர்த்தாலும் புரட்சித் தலைவருடைய புனித ஆட்சியிலே எல்லோருக்கும் பாசன வசதியை விஸ்தரிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப்பகுதியில் விதைப் பண்ணை.

*வினா எண் 147—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியில் உள்ள 600 ஏக்கர் புல்வெளிக் காட்டில் அரசு விதைப் பண்ணை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.